# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2080/31 - 2018 ජූලි මස 17 වැනි අඟහරුවාදා - 2018.07.17

*2080/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துவதானது ;*

(i) *2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தாபிக்கப்பட்ட நாணயக் கடிதத்தினைக் கொண்டு, குறித்த வாகனத்தின் ஏக உரிமையாளரும், அதன் தனிப்பட்ட பாவனையாளருமாகிய குறித்த நபரினால் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கான ஏற்புடையதான உற்பத்தித் தீர்வை வீதமானது 2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதமாக இருத்தல் வேண்டுமென்பதோடு, இந்தப் பிரிவின்கீழ் இறக்குமதி செய்யப்படும் குறித்த மோட்டார் வாகனமானது பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) ஆண்டுகளுக்கு பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி கைமாற்றப்படலாகாது.*

(ii) *2017, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2047/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 01 இனை பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம்,*

*“01. 2017.11.09 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினை அடிப்படையாகக் கொண்டு, 2015.10.14 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 22/99* (XXXI) *அல்லது 2016.06.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 22/99* (XXXII) *மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்றிற்கான ஏற்புடையதான உற்பத்தித் தீர்வையானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதமாக இருத்தல் வேண்டும்.”*


1A - PG 4029 — 557 (2018/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(iii) *2017, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2047/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 02 இனை பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம்,*

*"02. 2017.11.09 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினை அடிப்படையாகக் கொண்டு, 2016.07.14 ஆந் திகதிய வர்த்தக முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்றிற்கான ஏற்புடையதான உற்பத்தித் தீர்வையானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2017.06.09 ஆந் திகதிய 2022/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட திருத்தங்கள் என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதமாக இருத்தல் வேண்டும்."*

(iv) *2017, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2047/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 04 இனை பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம்,*

*"04. 2017.11.09 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினை அடிப்படையாகக் கொண்டு, வாகனத்தின் இயந்திரக் கொள்ளளவானது 1,300 கனசென்றி மீற்றருக்கு (க. செ.$^3$) மேற்பட்டும் ஆனால் 1,500 கனசென்றி மீற்றருக்கு (க. செ.$^3$) மேற்படாததும், இ. மு. 87.03 இன்கீழ் கைப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனமொன்றுக்கான உற்பத்தித் தீர்வையானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதமாக இருத்தல் வேண்டும்."*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, நவெம்பர் 17.*

*08-130*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*